மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) முசிறி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலும், முசிறி கூட்டுறவு விவசாய வங்கியிலும் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டை உள்ளவர்களைத் தவிர மற்ற இடங்களில் அதாவது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கடைகளில் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு மேற்படி சங்கமும் வங்கியும் கட்டுப்பாடு துணிகளை விநியோகம் செய்யவில்லை. முசிறியிலுள்ள எல்லா குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கும் கட்டுப்பாடு துணிகளை விநியோகம் செய்ய வேண்டும் என்று மேற்படி சங்கத்திற்கும் வங்கிக்கும் அறிவுரை வழங்கப்பட்டது.

கிராமிய கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் மூலம் கடன் பெறுவதற்கான வழிமுறைகள்.

***வினா எண். 289— திரு. சி. கணேசன் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமிய கூட்டுறவு விவசாய கடன் வழங்கும் சங்கத்தில் கடன் பெறும் விவசாயி தன் சொத்தின் பொறுப்பிலேயே கடன் பெற அரசு வழி வகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : புதிதாகக் கொண்டு வரப்படவிருக்கும் கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. புதிய கூட்டுறவுச் சட்டம் அமுலுக்கு வந்த பின்பு கிராமிய கூட்டுறவு விவசாய சங்கங்கள் உறுப்பினர்களின் நிலம் அல்லது அசையாச் சொத்தின் மீது பொறுப்புரிமையை ஏற்படுத்திக் கடன் வழங்கத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கூட்டுறவுச் சட்டம் இயற்றக் கூடிய நேரத்தில் புறம்போக்கு நிலங்களைக் கையில் வைத்து இருக்கும் விவசாயிகளுக்கும் அந்த நிலத்தின் பேரில் கடன் கொடுப்பதற்கான சூழ்நிலை உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களைக் கையில் வைத்திருப்பதே சட்டத்திற்குப் புறம்பானது. ஆக்கிரமிப்பு என்ற முறையில் அந்தத் தவறைச் செய்து விட்டு, மேற்கொண்டு சலுகைகள் பெற இயலாது. அந்த ஆக்கிரமிப்பை சட்ட ரீதியாக உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டால், அவர்களே அதைத் தன்னுரிமையாக வைத்துக் கொள்ளலாம் என்று சட்டப்படி செய்து கொண்டு விட்டால், அவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கிடைக்கச் செய்யலாம்.

[1982 மார்ச் 1]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது வரக் கூடிய புதிய கூட்டுறவுச் சட்டத்திலே ஒவ்வொரு விவசாயிக்கும் சொத்துரிமை அடிப்படையில் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே உள்ள ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினர் கடனைத் திருப்பிக் கட்டினால்தான் கடன் பெறமுடியும் என்ற நிலைமை உள்ளது. ஆகவே, கடன் தொகையைச் திருப்பிக் கட்டியவர்கள் அனைவருக்கும்—மற்றவர்கள் கடன் தொகையை திருப்பிக் கட்டவில்லை என்றாலும் கட்டியவர்களுக்கு—உடனடியாகக் கடன் தருவதற்கு ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கூட்டுறவுச் சட்டத்தில் கொண்டு வர இருக்கிற திருத்தத்தைப் பொறுத்த வரையில்—With regard to the charge on a particular property அதைப் பொறுத்த வரைக்கும், ஏற்கனவே ஒரு ப்ராபர்ட்டியின் மீது சார்ஜ் இருக்கிற போது, ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு கடனை வாங்குகிற போதும், அந்த ப்ராபர்ட்டி மீது சார்ஜ் செய்துதான் வாங்க வேண்டும் என்பதாலும், நீண்ட காலக் கடன் வழங்க முடியாது என்ற காரணத்தாலும், தற்போது இருக்கின்ற விதி 33-ஐ திருத்தி 41-விதி என்று தற்போது கொண்டு வர இருக்கிறோம். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அதன்படி விவசாயிகள் எளிய முறையில் கடன் பெற வேண்டும், அதிலே அவர்களுக்குச் சிரமம் இருக்கக் கூடாது என்கிற அடிப்படையில் புதிய முறை கொண்டு வர இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது கேட்டுக் கொண்டது போல், ஒரு விவசாயி வாங்கிய கடனைக் கட்டிவிட்டால், அந்த விவசாயிக்கு கடன் மீண்டும் வழங்க வேண்டும் என்கிற வகையில், பலர் கடன் தொகைகளைத் திருப்பிக் கட்டவில்லை என்பதால் கடன் வழங்கும் தகுதியை இழந்த வங்கிகள் கூட, கடன் தொகையைத் திருப்பிக் கட்டியவர்களுக்குக் கடன் கொடுக்க ஏற்கனவே பாரதத்திலேயே முதன் முறையாக தமிழக அரசு தான் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டிவிட்டால், மற்றவர்கள் கட்டவில்லையென்றாலும், திருப்பிக் கட்டியவருக்கு அந்தச் சங்கத்திற்குக் கடன் வழங்கும் தகுதி இருக்கிறதோ இல்லையோ, அந்த விவசாயிகளுக்கு கடன் தரவேண்டும் என்று நாம் உத்தரவிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40.)

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, இது நாள் வரையில் விவசாயிகளுக்கு அவர்கள் சாகுபடி செய்கின்ற பயிர் மதிப்பீட்டின் பேரில் கடன் வழங்கப்பட்டது. ஆனால் தற்

போது சொத்தின் பேரில்தான் கடன் வழங்கப்படும் என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 80 சதவீதம் குத்தகை நிலங்கள்தான். அப்படியானால் சொந்த நிலம் இல்லாத விவசாயிகளுக்கு எப்படி கடன் வழங்க முடியும். ஆகவே, அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்து, முன்பு இருந்ததைப் போல சாகுபடி செய்கின்ற பயிர் மதிப்பீட்டின் பேரில் கடன் வழங்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற வினா அடிப்படையில்லாதது. காரணம் நபர் ஜாமீனில் கடன் வழங்குவதும் தொடரும், சொத்தின் மீது கடன் வழங்குவதும் தொடரும். அதே நேரத்தில் சொத்தின் மீது கடன் வழங்குகிற போது இப்போது இருக்கின்ற நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு, சுலபமாகக் கடன் வழங்கும் நிலை இருக்கிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் காசுக் கடன்களுக்கான வட்டி விதம்.

*வினா எண். 290—திரு. இர. கருப்பையா : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் காசுக் கடன்களின் வட்டியை 12—7—1981 ஆம் தேதியிலிருந்து 7.5 சதமாக உயர்த்தி மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள் 1982 ஜனவரி முதல் வாரத்தில் அறிவித்துள்ளனவா ?

(ஆ) உயர்த்திய வட்டி விகிதத்தை அறிவிப்பு வெளியிட்ட தேதியிலிருந்து அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, சமுதாயத்தின் நலிந்த நிலையில் உள்ள ஏழை நெசவாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டியில் 3 சத வீதத்தை தற்போது அரசு ஈடு செய்கின்றது என்பது உண்மையா? அப்படி என்றால் இந்தச் சங்கங்களுக்கு இந்த வட்டி உயர்வைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?